S.P. Krishnamoorthy D.R.E.,

98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் நவம்பர் 12 * 2025 * மலர் -1 * இதழ்-164* VOL-1 * ISSUE-164 விலை ரூ.3 * பக்கம் -4

## டெல்லி கார் வெடிப்பு 10 பேர் பலி எதிரொலி:

# தமிழகம் முழுவதும் தீவிர கண்காணிப்பு

## டெல்லி கார் வெடிப்பு சம்பவ இடத்தில் தடயவியல் அதிகாரிகள் ஆய்வு



டெல்லிசெங்கோட்டை மெட்ரோ ரெயில் நிலையம் அருகே நேற்று மாலை ஒரு கார் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்துச்சிதறி, தீப்பிழம்பாக மாறியது. அருகில் இருந்த 4 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன.

கார்வெடித்துசிதறியதில் அதன்பாகங்கள்சுமார்300 அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டது. இந்த சம்பவத்தில் பலர் காயம் அடைந்தனர்.

இந்த பயங்கர சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 24 பேர் பலத்த காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்களுக்கு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அந்த பகுதி முழுவதும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

டெல்லியில் நடந்த பயங்கர சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள கோவில்களுக்கு உச்சபட்ச பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எல்லையோர மாநிலங்களில் பாதுகாப்பு படையினர் தங்களது கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர். சென்னை, மும்பை, டெல்லி உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் கடுமையான சோதனைக்கு பிறகே பயணிகள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இன்று 2ம் கட்ட தேர்தல் நடைபெறும் பீகார் மாநிலத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

டெல்லியில் நடந்த பயங்கர சம்பவம் குறித்து விசாரிக்க என்.ஐ.ஏ. களம் இறங்கியுள்ளது. தடயவியல் நிபுணர்களும் தங்களது விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

இந்நிலையில் டெல்லி கார் வெடிப்பு சம்பவம் நடைபெற்ற இடத்தில் நேற்றிரவு தடயவியல் துணைஅதிகாரிகள்ஆய்வு செய்த நிலையில் இன்று மீண்டும் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். சம்பவ இடத்தில் தடயங்களை சேகரித்து வருகின்றனர்.



சென்னை,நவ.12

- மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

டெல்லிசெங்கோட்டை அருகே நேற்று மாலை கார் வெடித்து சிதறி 10 பேர் பலியானார்கள். இதனையடுத்து நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கை உஷார்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தமிழகம் முழுவதும் ரெயில், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், மத வழிபாட்டுதளங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட முக்கிய ரெயில் மற்றும்பேருந்துநிலையங்கள் மற்றும் காரில் பயணிப்போரின் உடமைகளை போலீசார் சோதனை செய்து வருகின்றனர்.

இதனிடையே, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## டெல்லி கார் வெடிப்பு சம்பவம்: 4 பேரை கைது செய்த போலீசார்



டெல்லி செங்கோட்டை அருகே நேற்று மாலை கார் வெடித்து சிதறி 10 பேர் பலியானார்கள். மேலும் படுகாயமடைந்த 24 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.பெரும்அதிர்ச்சியைஏற்படுத்திய இச்சம்பவத்தை தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கை உஷார்படுத்தப்பட்டுள்ளது.

ரெயில், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், மத வழிபாட்டு தளங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, டெல்லியில் நடந்த கார் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக, சதி செயலாக இருக்கக்கூடும் என சந்தேகம் எழுந்த நிலையில் உபா சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில், கார்வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து பஹார்கஞ்ச், தர்யாகஞ்ச் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஹோட்டல்களில் இரவு முழுவதும் போலீசார் சோதனை நடத்தினர். ஹோட்டல் பதிவேடுகளையும் போலீசார் சரிபார்த்தனர். அப்போது, சந்தேகப்படும்படியான 4 பேரை போலீசார் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளதாக போலீஸ் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறந்தவர்களை மருத்துவமனையில் தேடும் குடும்பத்தினர்!

புதுடெல்லி, நவ.12–

டெல்லி செங்கோட்டையில் நடந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 8 பேர்உயிரிழந்துள்ளநிலையில் மரண ஓலத்துக்கு மத்தியில் பாதிக்கப்பட்டவர்கள் நிலையை தெரிந்து கொள்ள குடும்பத்தினர் பதற்றத்துடன் மருத்துவமனையின் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு தேடி அலைகின்றனர்.

டெல்லிசெங்கோட்டையில் குண்டு வெடித்தது. இதில் 10 பேர் உயிரிழந்ததாகவும், படுகாயம் அடைந்த15பேர்லோக்நாயக் ஜெய் பிரகாஷ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்த நிலையில் கார் வெடிப்பில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை தேடி அவர்களது குடும்பத்தினர் மிகுந்த பதற்றத்துடன் மருத்துவமனையின் ஒரு அறையில் இருந்து மற்றொரு அறைக்கு தேடி அலைகின்றனர்.

இது பற்றி பாதிக்கப்பட்ட சமீர் கான் என்பவரது உறவினர் இன்டசார் கான் கூறியதாவது:

"நான் ஒரு அறைக்கு ஓடி என்னுடைய உறவினரை பற்றிய தகவல் பெற அதிகாரிகளை அணுகினேன். ஆனால் யாரும் சொல்ல தயாராக இல்லை. குண்டு வெடித்த சிறிது நேரத்திலேயே சமீர் காயமடைந்ததாகவும், அவரிடம் மொபைல்போன்இல்லை என்றும் ஒருவரிடமிருந்து எங்களுக்கு அழைப்பு வந்தது. பின்னர் அதே நபர் எங்களுக்கு போன் செய்து சமீர் எல்என்ஜேபி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறினார். உடனே மருத்துவமனைக்கு வந்து பார்த்தோம். அவர் கிடைக்கவில்லை. தொடர்ந்து தேடிக்கொண்டு இருக்கிறோம்.'' என்று கூறினார்.

விராஷத் கான் என்பவர் கூறியதாவது:–

'எனது இரண்டு நண்பர்களான அமன் மற்றும் நௌமன் ஆகியோரை மருத்துவமனையில் தேடிக் கொண்டு இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் வார்டு எண் 5,8,14,19,20,23,25,28, ஆகிய வார்டுகளை இணைக்கும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ, 51 லட்சம் திட்டப்பணிகளை அமைச்சர்கள்சக்கரபாணி, மனிதவளமேலாண்மைதுறைஅமைச்சர்கயல்விழி செல்வராஜ்ஈரோடுபாராளுமன்றஉறுப்பினர்பிரகாஷ்திருப்பூர்கிழக்குமாவட்டசெயலாளர் இல.பத்மநாபன் தாராபுரம் நகர செயலாளர் முருகானந்தம் மாவட்ட துணைச் செயலாளர் முன்னாள் எம்எல்ஏ பிரபாவதி பெரியசாமி நகர மன்ற தலைவர் பாபு கண்ணன் நகர மன்ற துணைத் தலைவர் ரவிச்சந்திரன் மதுரை அவைத் தலைவர் கதிரவன் வார்டு கவுன்சிலர் மலர்விழி கணேசன் மாவட்ட மகளிர் அணி தொண்டரணி அமைப்பாளர் சசிகலா தில்லை முத்துநகரஆதிதிராவிடர்அமைப்பாளர்சிவசங்கர்நகரதொண்டரணிதுணைஅமைப்பாளர் சண்முகம் மாவட்ட முன்னாள் துணை செயலாளர் ஜீவா பெரியசாமி டாக்டர் இந்திராணி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் நன்றி உரை நகராட்சி ஆணையாளர் முஸ்தபா நகராட்சி பொறியாளர் சுகந்தி நன்றி தெரிவித்தனர்



கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் திருச்சி சாலை பெர்க்ஸ் பள்ளி அருகில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக மழைநீர் சீராக செல்லும் வகையில், கால்வாய் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர.ராகுல் நாத் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



## பீகாரில் விறுவிறு வாக்குப்பதிவு

பீகார் சட்டசபை தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு தொடங்கியது. 243 தொகுதிகள் கொண்ட பீகார் சட்டசபை தேர்தலில் முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கு கடந்த 6ந்தேதி முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது. இதுவரை இல்லாத அளவாக 65.08 சதவீத வாக்குகள் பதிவாகின. இதனை தொடர்ந்து மீதமுள்ள 122 தொகுதிகளுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு தொடங்கிநடைபெற்றுவருகிறது. மொத்தம் 3 கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 45 ஆயிரத்து 399 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்த சுமார் 4 லட்சம் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. வாக்குப்பதிவு தொடங்கியது முதல் வாக்காளர்கள் ஆர்வமுடன் வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து 403 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன், தனி மாவட்ட வருவாய் அலுவலர் முண்டியம்பாக்கம் சரஸ்வதி, துணை ஆட்சியர் (பயிற்சி) கே.கதிர்செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இரா.வளர்மதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



நீலகிரி மாவட்டத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து 160 கோரிக்கை மனுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பெற்றுக் கொண்டார்.

# நீலகிரி மாவட்டத்தில்,மக்கள் குறைதீர்க்கும் நாள்; பொதுமக்களிடமிருந்து160 கோரிக்கை மனுக்கள்!

**நீலகிரி,நவ.12**

நீலகிரி மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 160 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும். மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள்; உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். குறிப்பாக, அடிப்படை வசதிகள், வேலைவாய்ப்பு போன்ற மனுக்கள் மீது துறை அலுவலர்கள் அதன் மீது தனிகவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்)ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின்நேர்முகஉதவியாளர்கண்ணன் (கணக்குகள்), மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட நேர்முக உதவியாளர் (நிலம்) பழனிச்சாமி மற்றும்பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# பழனி ஆயக்குடி பகுதியில் தொடர் வாகன திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் கைது!

**பழனி,நவ.12**

திண்டுக்கல் மாவட்டம் பழனி உட்கோட்டம் ஆயக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கணக்கம்பட்டி சித்தர் கோவில் என்பது தமிழக அளவில் தற்பொழுது அதிக பக்தர்கள் வந்து தரிசனம் செய்யும் இடங்களில் ஒரு இடம் ஆகும் அங்கே விசேஷ நாட்களில் அதிக அளவில் ஆயிரக்கணக்கான மொத்தகள் வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு செல்கின்றனர் இதில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பக்தர் ஒருவரின் இரு சக்கர வாகனம் காணாமல் போனதாக ஆயக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்த நிலையில் பழனி டிஎஸ்பி தனஞ்செயன் அவர்களின் உத்தரவின்பெயரில் ஆயக்குடி காவல் ஆய்வாளர் திருமதி முருகேஸ்வரி அவர்களின் ஆலோசனையின் படி ஆயக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு ஆனந்த் தலைமையிலான காவல்துறையில் ஆனகாவலர்செந்தில் முருகன் ஆகியோர் அப்பகுதியில் காவல்துறை மூலம் வைக்கப்பட்டிருக்கும் சிசிடிவி கேமராக்களை கண்காணித்து குற்றவாளியின் முகத்தை துல்லியமாக தெரிந்த பிறகுஅவரைத்தொடர்ந்து அவரை பின் தொடர்ந்து தேடிவந்த நிலையில் சேலம் புறவழிச்சாலை அருகில் பதுங்கி இருந்த நபரைசிசிடிவி கேமரா மற்றும் சைபர் கிரைம் உதவியுடன் மடக்கிப் பிடித்தனர் .குற்றவாளிடம் விசாரணை மேற்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## கோவில்பட்டி அருகே

# கற்களை ஏற்றி வந்த லாரி சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து!

## போலீசார் விசாரணை!!

**தூத்துக்குடி நவ.12**

கோவில்பட்டி அருகே விஜயாபுரி தெற்குதிட்டங்குளம் சாலையில் கற்களை ஏற்றி வந்த லாரி திடீரென தனது கட்டுப்பாட்டை இழந்து சாலையின் ஓரத்தில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்து ஏற்பட்டபோது யாரும் அப்பகுதியில் வரவில்லை என்பதால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. கல்குவாரி பகுதியில் இருந்து கற்களை ஏற்றி வரும் லாரிகள் அதிவேகமாக செல்வதாகவும், இதனால் சாலைகள் சேதம் அடைவது மட்டுமின்றி, மக்கள் உயிர் பயத்துடன் சாலையில் செல்ல வேண்டிய சூழலில் இருப்பதாகவும், இதுகுறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இது விபத்து குறித்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





பச்சூர் பகுதியில் 10 கோடி மதிப்பில் புதிய ஐ.டி.ஐ கல்லூரி , கலெக்டர், எம்.எல்.ஏ பூமி பூஜை போட்டு தொடங்கி வைத்தனர்.

## புதுக்கோட்டை அருகே

# பூச்சி மருந்து கலந்த நெல்மணிகளை உண்ட 3 மயில்கள் உயிரிழப்பு!

**புதுக்கோட்டை , நவ.12**

புதுக்கோட்டைஅருகே விளைநிலத்தில் விதைக்கப்பட்ட நெல்மணிகளை பெரிதும் சேதப்படுத்தி வந்த எலிகளை அழிக்க பூச்சி மருந்து கலந்த நெல்மணிகளை விளைநிலத்தில் தூவிய விவசாய பெண்மணி, எலிக்காக வைக்கப்பட்ட பூச்சி மருந்து கலந்த நெல்மணிகளை வயலில் ஆங்காங்கே தூவி இருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் உணவு தேடிச்சென்ற மயில்கள் அதை உண்டதில் ஒரு ஆண் மயில் இரண்டு பெண் மயில் உட்பட 3 மயில்கள் பரிதாபமாக உயிரிழந்தது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து செல்வியை கைது செய்த



களை இறைதேடிச் சென்ற மயில் உண்டதால் 3 மயில்கள் பரிதாபமாக உயிரிழப்பு,

மயில்கள் உயிரிழக்க காரணமாக இருந்த பெண் விவசாயி செல்வியை வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின் அடிப்படையில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி நடவடிக்கை மேற்கொண்ட வனத்துறையினர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள பனசக்காடு கிராமத்தைச்சேர்ந்தவிளைநிலத்தில் மூன்று மயில்கள் உயிரிழந்த கிடப்பதாக வந்த ரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட வன அலுவலர் கணேசலிங்கம் உத்தரவு இட்டனர்.

அதன் பேரில் புதுக்கோட்டை வனச்சரக அலுவலர்சதாசிவம் குழுவினர் சம்பவ இடத்திற்குசென்று உயிரிழந்த மூன்று மயில்களின் உடல்களை கொத்தமங்கலம் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

அந்த விசாரணையில் தமிழ்செல்வன் என்பவரது மனைவி செல்வி (50) இவர் அவரது விவசாய நிலத்தில்விதைக்கப்பட்ட நெல்மணிகளை எலிகள் பெரிதும் சேதப்படுத்துவதால் எலிகளை அழிக்க பூச்சி மருந்து கலந்த நெல் வனத்துறையினர் அவரது நிலத்தில் தூவிய விஷம் மருந்து கலந்த நெல்மணிகளை சேகரித்து பின்னர் வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972ன் கீழ் வன உயிரின வழக்கு பதிவு செய்தனர்.

இதையடுத்து மணமேல்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் செல்வியை ஆஜர்படுத்தி வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டனர்.

மேலும் உயிரிழந்த மயில்களின் உடல்களை கொத்தமங்கலம் உதவி கால்நடை மருத்துவர் அசோகன் என்பவரால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அதன் பாகங்கள் சேகரிக்கப்பட்டு திருச்சி தடய அறிவியல்துறைக்கு விஷம் தன்மையினை அறிய அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் வன உயிரினங்களை வேட்டையாடுதல் மற்றும் விஷம் கலந்த உணவுகளை மற்ற உயிரினங்களுக்காக வைப்பதினால் வன உயிரினங்கள் பாதிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களின் மீது வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 இன் கீழ் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட வன அலுவலர் கணேசலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பச்சூர் பகுதியில் 10 கோடி மதிப்பில் புதிய ஐ.டி.ஐ கல்லூரி!

## கலெக்டர், எம்.எல்.ஏ பூமி பூஜை போட்டு தொடங்கி வைத்தனர்!!

**நாட்றம்பள்ளி. நவ.12**

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி தாலுக்காவில் உள்ள மாணவர்கள் ஐ.டி.ஐ படிக்கஅண்டை மாவட்டத்திற்கு சென்று வந்த நிலையில் 2025 2026 கல்வி ஆண்டில் ஐ.டி.ஐ கல்லூரி செயல்படும் என்று அரசு தரப்பில் கடந்த ஆண்டு அறிவிப்பு வெளியிட்ட நிலையில் தற்காலிகமாக நாட்றம்பள்ளியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் கல்லூரி இயங்கி வரும் நிலையில் நாட்றம்பள்ளி அடுத்த பச்சூர் பகுதியில் சுமார் 2 ஏக்கர் பரப்பில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஐ.டி.ஐ கட்டிடம் கட்டுவதற்கான கட்டுமான பணிகளை தொடங்கி வைக்கும் விதமாக அடிக்கல் நாட்டு விழா மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இதில் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ் கலந்து கொண்டு பூமி பூஜை போட்டு அடிக்கல் நாட்டினார். அப்போது தேர்தலுக்குள் கட்டிட பணி முடிக்க வேண்டும் என்று வெண்டிகொள்ளுங்கள் என்று அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தார். இதில் மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் சிங்காரவேலன். நாட்றம்பள்ளி சேர்மன் வெண்மதி முனுசாமி. கார்த்தி அருள்நிதி. தகவல் தொழில்நுட்பு ஏராளமான அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 04 நபர்களுக்கு அலுவலக உதவியாளர் நிலையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, வழங்கினார்.

# இடிந்து விழும் நிலையில் உள்ள கே.அத்திக்கோம்பை பழைய கிராம நிர்வாக அலுவலக கட்டிடம்!

## புதிய கட்டிடம் அமைத்துத்தர வட்டாட்சியர் வி.சஞ்சய் காந்தியிடம் கோரிக்கை மனு!!





**ஒட்டன்சத்திரம் நவ.12**

இடிந்து விழுந்து ஆபத்தை உருவாக்கும் அபாய நிலையில் உள்ள கே.அத்திக்கோம்பை (குரூப்) கிராம நிர்வாக அலுவலகத்தை இடித்து அப்புறப்படுத்தி புதிய கட்டிடம் அமைத்து பொதுமக்களுக்கு நன்மை செய்திட ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் வி.சஞ்சய் காந்தி அவர்களிடம் பாரதிய ஜனதா கட்சி திண்டுக்கல் மேற்கு மாவட்ட பிரச்சார பிரிவு மாவட்ட செயலாளர் எஸ்.சரவணக்குமார் கோரிக்கை மனு அளித்துள்ளார்.அம் மனுவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கே.அத்திக்கோம்பை (குரூப்) கிராம நிர்வாகத்திற்கு காளாஞ்சிபட்டி, லெக்கையன் கோட்டை, கொல்லபட்டி,கே.அத்திக்கோம்பை ஆகிய கிராமங்களுக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு வருவாய் மற்றும் இதர சான்றுகள் சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று வரவேண்டியுள்ளது.

இந்நிலையில் காளாஞ்சிபட்டி, லெக்கையன் கோட்டை, கொல்லபட்டி, கே.அத்திக்கோம்பை ஆகிய கிராமங்களுக்கும் மையஇடமாக கே.அத்திக்கோம்பை உள்ளது. இந்த கே.அத்திக்கோம்பை அருகில் அண்ணாநகரில் செயல்பட்டு வந்த பழைய கிராம நிர்வாக அலுவலகம் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்து சேதமடைந்ததால், தற்காலிக அலுவலகமாக பாச்சலூர் செல்லும் பாதை கண்ணப்பன் நகரில் கிராம நிர்வாக அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்திற்கு காளாஞ்சிபட்டி, லெக்கையன்கோட்டை, கொல்லபட்டி, கே.அத்திக்கோம்பை கிராமங்களிலிருந்து பொதுமக்கள் வருவதற்கு போதுமான வசதியில்லாததால், பழைய இடிந்து விழும் நிலையில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தை இடித்து புதிய கிராம நிர்வாக அலுவலகம் கட்டி தரவேண்டும் எனவும் பழைய கிராம நிர்வாக அலுவலகத்தை சுற்றி புதர் மண்டி இருப்பதால் அப்பகுதி சுற்றியுள்ள பொதுமக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக பாம்பு உள்ளிட்ட விச ஜந்துக்கள் நடமாட்டம் உள்ளதால் மாவட்ட நிர்வாகம், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர்மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக பழைய இடிந்த கிராம நிர்வாக அலுவலகத்தை அப்புறப்படுத்தி புதிய கிராம நிர்வாக அலுவலம் அமைத்து தர உதவிட வேண்டுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



## மலேசியா – இந்தியா சுற்றுலா உறவை வலுப்படுத்தும் முயற்சி:

# சென்னையில் “விசிட் மலேசியா இயர் 2026” பிரச்சாரம் தொடக்கம்!

**சென்னை, நவ.12**

மலேசிய துணைத் தூதரகம் மற்றும் டூரிசம் மலேசியா சென்னை இணைந்து “விசிட் மலேசியா இயர் 2026 (VMY2026): எக்ஸ்பீரியன்ஸ் த மாஜிக் ஆஃப் மலேசியா” எனும் விழாவை சென்னையின் எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் துவங்கியது. மலேசியா–இந்தியா சுற்றுலா உறவுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இரண்டு நாள் விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விழாவில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், தேதாரிக் மற்றும் ரொட்டிசனை தயாரிப்பு காட்சிகள், பட்டிக் கலை அரங்குகள்,

மலேசிய உணவு அனுபவம் உள்ளிட்டவை இடம்பெற்றன. மலேசிய பாடகர் சுபீர் கான் வழங்கிய இசை நிகழ்ச்சி பார்வையாளர்களை கவர்ந்தது. அதிகாரப்பூர்வ விமானக் கூட்டாளராக ஏர் ஏசியா இருந்தது. மேலும் இந்திகோ, பிக்யோர் ட்ரெயில், அக்ஷயா இந்தியா, மதுரா டிராவல்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களும் பங்கேற்றன.

மலேசிய துணைத் தூதர் கே. சரவண குமார் கூறியதாவது: “இந்த விழா, இரு நாடுகளின் நட்பு மற்றும் பண்பாட்டு இணைப்பை முன்னெடுக்கிறது.” டூரிசம் மலேசியா சென்னை இயக்குநர் ஹிஷாமுத்தீன் முஸ்தபா தெரிவித்ததாவது: “பல விமான நிறுவனங்களின் கூட்டணிகள் 2026 ஆம் ஆண்டில் இந்திய சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்க உதவும்.” விழாவை வெற்றிகரமாக நடத்திய அனைத்து பங்காளிகளுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



### விழுப்புரத்தில்

# மண்பாண்ட தொழிலாளர்கள் சங்கம் சார்பில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

விழுப்புரம் நவ.12

விழுப்புரம் நகராட்சி திடல் மைதானத்தில், தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் (குலாலர்) மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல சங்கம் சார்பில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில், தை பொங்கல் பண்டிகை அன்று அரசு வழங்கும் பரிசுத் தொகுப்பில் அடுப்புடன் கூடிய மண் பாணை சேர்த்திட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. சங்கத்தின் மாவட்ட தலைவர் K. ஜய்யனார், மாவட்ட செயலாளர் S. வினோத், மாவட்ட பொருளாளர் G. P. ஏழுமலை உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பலர் கலந்து கொண்டனர். பின்னர்,

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சங்கத்தினர் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்தனர். அந்த மனுவில், மண்பாண்ட தொழிலாளர்களின் நலனுக்காக அரசு மண்பாணை மற்றும் மண் அடுப்பை தொழிலாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும். இதன் மூலம் அழிந்து வரும் மண்பாண்ட தொழில் மீண்டு வளர்ச்சி பெறும் தமிழர் மரபு மாறாமல் நிலைத்து நிற்கும் எனக் கோரிக்கைகளை நிறைவேற்ற கூறி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# நத்தம் பகுதியில் நாளை மின்தடை!

நத்தம், நவ, 12

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் உப மின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதையொட்டி நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நத்தம், கோவில்பட்டி, செல்லப்பநாயக்கன் பட்டி, பொய்யாம்பட்டி, மூங்கில்பட்டி, ஊராளிபட்டி, சேத்தூர், அரவங்குறிச்சி, சமுத்திராப்பட்டி, கோட்டையூர், சிறுகுடி, பூசாரிபட்டி, பூதகுடி, பன்னியாமலை, உலுப்பகுடி, காட்டுவேலம்பட்டி, ஆவிச்சிபட்டி, தேத்தாம்பட்டி, மற்றும் ஒடுகம்பட்டி ஆகிய பகுதிகளில் மின்சாரம் வினியோகம் தடை செய்யப்படும் என நத்தம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் புண்ணியராகவன் தகவல் தெரிவித்துள்ளார்.



# லட்சுமி நகர் பூங்காவை காணோம்!

## நகரமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன் குற்றச்சாட்டு!!

வந்தவாசி,நவ 12

வந்தவாசி நகர மன்ற சாதாரண கூட்டம் நகர மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி நகர்மன்ற கூட்டம், நகர் மன்ற கூட்ட அரங்கில் தலைவர் எச்.ஜலால் தலைமையில் நடை பெற்றது. நகராட்சி ஆணையர் ஆர். சோனியா முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய நகர் மன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், புதிதாக அமைக்கப்பட்ட லட்சுமி நகரில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதா என கேள்வி எழுப்பினார். அதற்குபதில்அளித்த நகரமைப்பு அலுவலர் அந்த பூங்காவிற்கு உண்டான தொகையை அந்த நிலத்தின் உரிமையாளர் அரசாங்கம் வசம் செலுத்தி விட்டார் என்றார். நகர மன்றத்தின் கவனத்திற்கு வராமலேயே அவரால் எப்படி பூங்காவிற்கான பணத்தை செலுத்த முடியும் என கேள்வி எழுப்பினார். நகராட்சிக்கு அந்தப் பணம் தேவையில்லை அங்கு வாழும் பொதுமக்களுக்குதான்பூங்காதேவை. அரசாங்க மதிப்பீடு 20 லட்சம் எனவும், சந்தை மதிப்பு ஒரு கோடி எனவும் சொல்லப்படும் நிலையில் அந்த இடத்திற்கு பணம் செலுத்த யார் அனுமதி அளித்தது. எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது எனவும் கேள்வி எழுப்பினார். தொடர்ந்து பேசிய அவர் வந்தவாசி புதிய பேருந்து நிலையம் சுடுகாட்டில் இரவு வழக்குகள் தெரியாததால் தகன கிரியைகள் உள்ளிட்டவை செய்ய மிகுந்த சிரமம் ஏற்படுகிறது என்றார்.

நகரமன்ற உறுப்பினர் நாகூர் மீரான் பேசுகையில், எனது வார்டில் சின்டெக்ஸ் தொட்டி சரி செய்ய 4 ஆண்டுகளாக வைக்கும் கோரிக்கை உதாசீனப்படுத்தப்பட்டு வருகிறது எனது வார்டுபுறக்கணிக் கப்படுகிறது என குற்றம் சாட்டினார். ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றிய நகராட்சி அலுவலகத்தை பெரியார் மாளிகைஎன ஆவணங்களில் குறிப்பிட வேண்டும் என்றார். கூரை ஒழுகும் அண்ணா பேருந்து நிலையம் சீர் செய்யப்பட வேண்டும் எனவும் கோரிக்கை எழுப்பினார். வந்தவாசி நகரப் பகுதியில் குப்பைகள் அகற்றும் பணி சரிவர நடக்காத காரணத்தினால்தனியாருக்குகொடுத்துள்ள குப்பை அள்ளும் உரிமையை ரத்து செய்ய வேண்டும் என்று பேசினார்.

நகர மன்ற உறுப்பினர் ராம ஜெயம் பேசுகையில், கலைஞர் பேருந்து நிலையத்தை முழுமை யான பயன்பாட்டிற்கு கொண்டு வரக்கோரி 3 ஆண்டுகளுக்கும் மேலாக பேசி வருகிறேன். எனது வார்டில் குப்பைகள் தேங்கி கிடக்கின்றன தூய்மை பணியாளர்கள் அந்தப் பகுதிக்கு வருவதே இல்லை என குற்றம் சாட்டினார். நகர மன்ற உறுப்பினர் சந்தோஷ் பேசுகையில், எனது வார்டில் குப்பை அள்ளும் பணி நடைபெறுவதே இல்லை. குப்பைகள் ஆங் காங்கே தேங்கி கிடக்கின்றன என பேசினார். குப்பை அள்ளும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். பின்பு கவுன்சிலர்கள் ராம ஜெயம், சந்தோஷ் நகராட்சி நிர்வா கத்தை கண்டித்துஉள்ளிருப்புபோராட்டத்தில் ஈடுபட்டனர். பதில் அளித்து பேசிய நகர மன்ற தலைவர் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேற்ற ஆவன செய்யப்படும் என்றார்.

இந்த கூட்டத்தில், நகர மன்ற துணைத் தலைவர் அன்னை க சீனிவாசன், சுகாதார மேற்பார்வையாளர் லோகநாதன், நகரமன்ற உறுப்பினர்கள் கிஷோர் குமார், மகேந்திரன், நூர்முகம்மது, அம்பிகா, ரியானா மற்றும் நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் சீருடை பணியாளர் தேர்வு!

## அமைச்சுப் பணியாளர்களுக்கு அறிவுரை நிகழ்வு!!



திருப்பத்தூர் நவ.12

திருப்பத்தூர் மாவட்டத்தில், திருப்பத்தூர்மாவட்ட காவல் கண்காணிப் பாளர் வி.சியாமளா தலைமையில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் 2025ம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை காவலர், சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பணியிடங்களுக்கு தேர்வு நடைபெற உள்ள நிலையில் தேர்வு பணியில் ஈடுபட உள்ள காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காவலர் எழுத்து தேர்வு குறித்து காவல்துறையினர் மற்றும் காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும், அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுரைகள் வழங்கினார்.

# காஞ்சிபுரம் பல்லவன் பொறியியல் கல்லூரி 25 வது ஆண்டு பட்டமளிப்பு விழா!

## தாளாளர் போஸ் தலைமையில் நடந்தது!!



காஞ்சிபுரம் நவ. 12

காஞ்சிபுரம் புகழ்பெற்ற புகழ்பெற்ற பல்லவன் பொறியியல் கல்லூரியின் 25வது ஆண்டு பட்டமளிப்பு விழா தாளாளர் பி. போஸ் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை திம்மசமுத்திரம் வெள்ளை கேட் பகுதியில் அமைந்துள்ள காஞ்சிபுரத்தில் பொறியியல் கல்லூரி என்றாலே அது பல்லவன் பொறியியல் கல்லூரி தான் என்று பெயர் எடுத்த புகழ்பெற்ற பிரபல காஞ்சீபுரம் பல்லவன் கல்வி குழுமத்தில் அங்கமான காஞ்சிபுரம் பல்லவன் பொறியியல் கல்லூரி கடந்த 25 ஆண்டுகளாக செயல்பட்டு திறன்மிகு மாணவர்களை உருவாக்கி வருகிறது அந்த வகையில் பல்லவன் பொறியியல் கல்லூரியின் 25வது ஆண்டு பட்டமளிப்பு விழாகல்லூரி வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் கல்லூரியின் நிறுவனரும், தாளாளருமான பி.போஸ் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட புது டெல்லி அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் ஒழுங்குமுறை தலைவரின் பிரிவு ஆலோசகர் பேராசிரியர் மோரிராமுலு கலந்து கொண்டு பல்லவன் பொறியியல் கல்லூரியில் 7 பாடப்பிரிவுகளில் பயின்று தேர்ச்சி பெற்ற க27 மாணவமாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்துரை வழங்கி கௌரவித்தார். இயக்குனர் ஜெயபெருமாள்போஸ் மற்றும் இயக்குனர்கள் பட்டமளிப்பு விழாவில் பல்லவன் பொறியல் கல்லூரியின் நிர்வாககன்னிகா ஜானகி பரமேஸ்வரிபோஸ், புருஷோத்தமன், எத்திராஜ் கோவிந்தராஜ், கிருஷ்ணன். மஞ்சுளாதேவிசிவசண்முகம், கல்லூரி முதல்வர் பால்வண்ணன், பல்லவன் மருந்தியல் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் ஜெ.கார்த்தி, நீரிழிவு சிறப்பு மருத்துவர் சத்யநாராயணன் பேராசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள், பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் மாணவ/ மாணவிகள் தங்கள் வாங்கிய பட்டங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர். விழா ஏற்பாடுகளை பல்லவன் பொறியியல்கல்லூரிநிறுவனரும் தலைவர் பி.போஸ் மற்றும் நிர்வாக இயக்குனர் பி.ஜெயபெருமாள் போஸ் ஆகியோர் செய்திருந்தனர்.

### ராஜபாளையம் அருகே

# சாலை விபத்துகள் விவசாயி உள்பட 2 பேர் பலி!

ராஜபாளையம். நவ.12

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தேவதானத்தைச் சேர்ந்த கோவிந்தன்( 70.) இவர் சாஸ்தா கோவில் சாலையில் தனது வயலில் வேலை பார்த்துவிட்டு சைக்கிளில் வீடு திரும்பி கொண்டிருந்தார். அப்போது சாஸ்தா கோவில் செல்லும் சாலையில் உள்ள நாகமலை கோவில் அருகே நேற்று முன்தினம் ரோட்டில் வந்து கொண்டிருக்கும் பொழுது திடீரென்று பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் இவர் மீது மோதியதில் இவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோதிய வாகனம் நிற்காமல் உடனே சென்று விட்டது. இது குறித்து சேத்தூர்போலீசார்வழக்கு பதிவு செய்து அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவானகாட்சிகளை வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்கள் யார் என போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் சேத்தூர் மேட்டுப்பட்டி தெருவை சேர்ந்த மாரியப்பன் மகன் இசக்கி ராஜ் ( 21) இவர் ராஜபாளையத்தில் தனியார் மில்லில் வேலை பார்த்து வருகிறார். இவர் புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிளில் இவருடன் பணிபுரியும் தேவதானத்தைச்சேர்ந்தமுத்துராஜ் ( 27) ஆகிய இருவரும் சேத்தூரிலிருந்து ராஜபாளையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வரும் பொழுது எதிர்பாராத விதமாக நிலை தடுமாறி சாலையோர மரத்தின் மீது மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே இசக்கி ராஜ் பலியானார். பின்னால் அமர்ந்து வந்த முத்துராஜ் பலத்த காயத்துடன் உயிர் தப்பினார். தகவல் அறிந்து சேத்தூர் போலீசார் இவர்களை மீட்டு ராஜபாளையம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். இதுகுறித்து சேத்தூர்போலீசார்வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# பாரத சாரண சாரணியர் இயக்க மாநில விருது!

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் வழங்கினார்!!



தாம்பரம்,நவ 12

பாரத சாரண சாரணியர் இயக்கம் தமிழ்நாடு சார்பில் நிறுவன நாள் விழா மாநில விருது வழங்கும் விழா சாரண இயக்க இணையதள தொடக்க விழா மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவில் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க மாநில தலைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு சாரண சாரணியர்களுக்கான சான்றிதழ் வழங்கி இணையதள சேவையை தொடங்கி வைத்தார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா தொடக்க கல்வி இயக்குனர் நரேஷ் சாய்ராம் கல்வி குழும தலைவர் சாய் பிரகாஷ் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் சாரண சாரணியர் இயக்கத்தை சேர்ந்த ஏழாயிரம் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பிசானத்தூர் மருத்துவக் கழிவு ஆலைக்கு எதிராக போராட்டம்; மக்களிடம் அ.ம.மு.க.வினர் சந்தித்து ஆதரவு!



கந்தர்வகோட்டை, நவ. 12

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே பிசானத்தூர் கிராமத்தில் அமைய இருக்கும் தனியார் உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிசானத்தூர் கிராம மக்கள் மற்றும் போராட்டக் குழுவினர் அப்பகுதியில் உள்ள திரௌபதி அம்மன் கோவில் உலகத்தில் கடந்த 16 நாட்களாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்களுக்கும் போராட்டக் குழுவிற்கும் அ.ம.மு.கசார்பில்பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன்அவர்களின்ஆணைக்கிணங்க துணைப் பொதுச் செயலாளர் எம். ரங்கசாமி தலைமையிலும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் ஓ.கார்த்திக் பிரபாகரன் முன்னிலையில் ஆலை அமைப்பதற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தும் போராட்டக் குழுவினருக்கும் ஊர் பொதுமக்களுக்கும் தங்களது ஆதரவை தெரிவித்தும் கலந்து கொண்டனர். இதில் மத்திய மாவட்ட செயலாளர் ஏ.வீரமணி தஞ்சாவூர்மாநகரமாவட்ட செயலாளர் ராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். போராட்டக் களத்தில் பேசிய துணைப் பொதுச் செயலாளர் ரங்கசாமி விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் நம்பியுள்ள தங்கள் கிராமம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தூய்மை கிராமத்திற்கான விருதைப் பெற்ற கிராமம் என்று அறிந்தேன். மேலும் இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர்தான் கந்தர்வகோட்டை அதன் சுற்றியுள்ள பகுதிகளுக்கு கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் விளங்கிவருகிறது ஆனால் தற்போது விளை நிலத்திற்கு அருகாமலேயே மருத்துவகழிவுஆலையை கொண்டு வந்தால் சுற்றுச்சூழல் விவசாயம் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் அதனால் ஒருபோதும் பிசானத்தூர் பகுதியில் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலையை அமைக்க விடமாட்டோம் என்று கூறி கிராம மக்கள் நடத்தும் இந்த போராட்டத்திற்கு முழு ஆதரவை தெரிவித்து என்றைக்கு உங்களுக்கு துணை நிற்போம் என்று பேசினார்.

### திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# நோயாளிகளுக்கு பயன்படுத்தக்கூடிய வீல் சேர்களை குப்பை அள்ள பயன்படுத்தும் வீடியோ!



திண்டுக்கல்,நவ 12

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு பயன்படுத்தக்கூடிய வீல் சேர்களை குப்பை அள்ள பயன்படுத்தும் வீடியோ வைரல். திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அரசின் சார்பாக முடியாத நிலையில் உள்ள நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகள் பயன்பெறும் விதமாக வீல் சேர்கள் வழங்கப்பட்டுள்ளது. அந்த வீல் சேர்களை நோயாளிகளுக்கு பயன்படுத்தாமல் குப்பைகளை அள்ளிச் செல்ல பயன்படுத்துகின்றனர்.

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு பயன்படுத்தக்கூடிய வீல் சேர்களை குப்பை அள்ளி செல்வதற்கு பயன்படுத்தபட்ட சம்பவம் நோயாளிகளிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது இது குறித்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.



# திரியாலத்தில் ரூ.40.85 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடத்திற்கு பூமி பூஜை!

திருப்பத்தூர் நவ.12

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட திரியாலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்காக கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை ஜோலார்பேட்டை சட்டமன்ற நிதியிலிருந்து புதியதாக அமைக்கும் பணிக்கான பூமி பூஜை விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ் அவர்கள் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.

அரசு பள்ளி மாணவ, மாணவிகளின் கல்வி நலனை முன்னிட்டுரூ 40.85 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் சத்யா, சதீஷ்குமார், துறை சார்ந்த அதிகாரிகள், தலைமை

ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் ஊர் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு பாராட்டுத் தெரிவித்தனர்.




கோயம்புத்தூர்மாநகராட்சிகிழக்குமண்டலம்வார்டுஎண்.6க்குட்பட்டவீரியம்பாளையம் பகுதியில் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் தனியார் பங்களிப்புடன் (கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை) ரூ.2.18 கோடி மதிப்பீட்டில், கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் , மாநகராட்சி ஆணையாளர் மா. சிவகுருபிரபாகரன் ஆகியோர் முன்னிலையில், கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி.ப.ராஜ்குமார் , திறந்து வைத்தார்கள். உடன் துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், கிழக்குமண்டலதலைவர்இலக்குமிஇளஞ்செல்விகார்த்திக்,கல்விக்குழுத்தலைவர்மாலதி நாகராஜ், கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை தலைவர் நல்லா ஜி.பழனிசாமி, உதவி ஆணையர் ராம்குமார், செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி செயற்பொறியாளர் .எழில், மாமன்ற உறுப்பினர்கள் பொன்னுசாமி, மணியன், மண்டல சுகாதார அலுவலர் சந்திரன், உதவி பொறியாளர் குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



கோயம்புத்தூர்மாநகராட்சிவடக்குமண்டலம்வார்டுஎண்.26க்குட்பட்டபகுதிகளிலுள்ள பொதுமக்கள்பயன்பெறும்வகையில்அகிலாண்டேஸ்வரிகோயில்திருமணமண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன்ஸ்டாலின்சிறப்புமுகாமினைமேயர்கா.ரங்கநாயகிராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் வடக்கு மண்டல தலைவர் வே.கதிர்வேல், மாமன்ற உறுப்பினர் சித்ரா வெள்ளியங்கிரி, உதவி வருவாய் அலுவலர் அஸ்கர் பாஷா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட அனைத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.

## தென்காசி சட்டமன்றத் தொகுதி

# திமுகவை அதிர வைத்த காங். எம் எல் ஏ போர்க்கொடி தூக்கியது ஏன்?



தென்காசி நவ.12

கடந்த 2021 ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் தென்காசி தொகுதியில் திமுகவின் பிரதான தோழமை கட்சியான காங்கிரஸ் வெற்றி பெற்றது. அக்கட்சியின் சார்பில் பழனிநாடார் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டு வருகிறார்.

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் ஆறே மாதங்கள் உள்ள நிலையில் தென்காசி தொகுதி மேம்பாட்டிற்க்காக தேர்தலின் போது திமுக அறிவித்த பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த சட்டமன்ற தேர்தலின் போது திமுக சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் வாக்குறுதியில் தென்காசியில் வேளாண்மையை அடிப்படையாக கொண்டு சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கப்படும், தென்காசியில் மாழ்பழச்சாறு தயாரிப்பு தொழிற்ச்சாலை அமைக்கப்படும், தென்காசியில் கொப்பரை தேங்காய்களை காயவைப்பதற்கான மின் உலர் சாதன வசதி ஏற்ப்படுத்தப்படும், இரட்டை குளம் ஊத்துமலை கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படும், தென்காசியில் மருத்துவ கல்லூரி மற்றும் சட்ட கல்லூரி அமைக்கப்படும், தென்காசியில் பீடித்தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி ஏற்ப்படுத்தி தருவதற்காக இ.எஸ்.ஐ மருத்துவ மனை அமைக்கப்படும் என்பவை இடம் பெற்றிருந்தன.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்த வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. இதில் இரட்டை குளம் ஊத்துமலை பெரியகுளம் கால்வாய் இணைப்பு திட்டம் என்பது இப்பகுதி மக்களின் 50 ஆண்டு கால கோரிக்கையாகும். தென்காசி மாவட்டத்தின் இரட்டை குளம் பகுதியிலிருந்து, நீர் பற்றாக்குறை உள்ள ஊத்துமலை பகுதிக்கு உபரி நீர் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டமாகும்.

இத்திட்டத்தை தொடர்ந்து பல்வேறு கால கட்டங்களில் இங்கு பதவி வகுத்த எம்.எல்.ஏக்கள் பேசி வந்த நிலையில் தற்போதைய எம்.எல்.ஏ பழனிநாடார் இதற்கு கடும் முயற்சிகள் மேற்க்கொண்டார்.

கடந்த 29ம் தேதி தென்காசியில் நடந்த அரசு விழாவிற்கு வந்த தமிழக முதல்வர் ஸ்டாலின் இரட்டை குளம் ஊத்துமலை பெரியக்குளம் கால்வாய் இணைப்பிற்கான அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அன்று அந்த அறிவிப்பு வெளியாகதது எம்.எல்.ஏ பழனி நாடாரை மட்டுமின்றி, இப்பகுதி விவசாயிகள் பொது மக்கள் என்று அனைத்து தரப்பினரையும் அதர்ச்சி அடைய செய்தது.

இதை தொடர்ந்து எம்.எல்.ஏ செல்லும் இடமெல்லாம் இரட்டைகுளம் ஊத்துமலை பெரியகுளம் திட்டம் என்னாச்சு என்று விவசாயிகள் வேள்வி எழுப்ப தொடங்கிவிட்டனர். இதனால் தொகுதியில் அவருடைய நற்பெயருக்கு களங்கம் ஏற்ப்படும் சூழல் ஏற்ப்பட்டுள்ளது.

திமுகவினரும் தென்காசி தொகுதியில் இத்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து நீர்பாசனத்துறை அமைச்சர் மற்றும் முதல்வரை சந்தித்து திட்டத்திற்கு ஒப்புதல் பெற முயற்சி மேற்க்கொண்டுள்ளனர்.

தென்காசி தொகுதியில் திமுக கூட்டணிக்கு பல்வேறு சாதகமான அம்சங்கள் இருந்த போதிலும் இரட்டைகுளம் ஊத்துமலை திட்டம் செயல்படுத்தாதது அக்கூட்டணிக்கு நிச்சயம் பின்னடைவுதான் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்1, வார்டு27, பாகம் எண்:5,6,8,10 சாமுண்டிபுரம் 2வது வீதி, சாய்பாபா நகர், பாலமுருகன் நகர்,கொங்குநகரி ஆகியபகுதிகளில்114திருப்பூர்தெற்குசட்டமன்றதொகுதிக்குட்பட்டபகுதியில்வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளான வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின்இல்லத்திற்குசென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணிகளைநேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## பல்லடம் அருகே

# 30 ஆயிரம் லஞ்சம் வாங்கிய பெண் விஏஓ அதிரடி கைது!



திருப்பூர்,நவ.12

திருப்பூர்மாவட்டம்பல்லடம் அடுத்த வடுகபாளையம் புதூர் கிராம நிர்வாக அலுவலர் முத்துலட்சுமி.இவரிடம் கரடிவாவி பகுதியை சேர்ந்த கிருஷ்ணசாமி என்பவர் வடுகபாளையம் பகுதியில் நிலத்திற்கான பட்டாவில் பெயர் சேர்க்க விண்ணப்பம் அளித்துள்ளார்.அதற்கு கிராம நிர்வாக அலுவலரான முத்துலட்சுமி 30 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார்.லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத கிருஷ்ணசாமி இது குறித்து லஞ்ச ஒழிப்பு துறையினரிடம் புகார் அளித்தார்.அதனை தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு துறையினர் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுக்களைகொடுத்துள்ளனர்.கிருஷ்ணசாமி பணம் தருவதாக முத்துலட்சுமியிடம் தெரிவித்ததை தொடர்ந்து வடுகபாளையத்தில் உள்ள தனது வீட்டிற்கு வர சொல்லியுள்ளார்.வீட்டிற்கு சென்ற கிருஷ்ணசாமி முத்துலட்சுமியிடம் 20 ஆயிரம் பணம் வழங்கியுள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த விஜிலென்ஸ் டிஎஸ்பி ரவிச்சந்திரன் தலைமையிலான போலீசார் கிராம நிர்வாக அலுவலர் முத்துலட்சுமியை கையும் களவுமாக பிடித்தனர்.

வீட்டில் வைத்து லஞ்சம் வாங்கும் போது கிராம நிர்வாக அலுவலர் முத்துலட்சுமியை கைது செய்த லஞ்ச ஒழிப்பு துறையினர் அவரிடம் தொடர்ந்து விசாணை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாணியம்பாடி அருகே

# 3 லட்சம் கேட்டு பிளாக் மெயில்; கலெக்டர் அலுவலகத்தில் புகார்!



திருப்பத்தூர் நவ.12

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி அடுத்த, வெலக்கல் நத்தம் பகுதியைச்சேர்ந்தவர் வேணுகோபால் மகன் கௌதம் (21) இவர் வாணியம்பாடி அடுத்த ஆயர்பாடி கிராமத்தைச் சேர்ந்த ஹரி என்பவர் நடத்தி வரும் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனியில் வேலை செய்து வந்துள்ளார். இந்த நிலையில் கௌதம் தன்னுடைய வீட்டில் சண்டை போட்டதன் காரணமாக 3 மாதங்களாக ஹாலோ பிரிக்ஸ் கம்பெனியி லேயே தங்கி இருந்த தாக கூறப்படுகிறது. அப்போது ஓனர் ஹரி உனக்கு மாட்டு லோன் வாங்கி தருகிறேன் எனக் கூறியுள்ளார். இதனை நம்பிய கௌதம் தன்னிடமிருந்த நிரப்பப்படாத 3 காசோலைகளை ஓனரிடம் கொடுத்து உள்ளார். இந்த நிலையில், அந்த ஹாலோபிரிக்ஸ்கம்பெனியில் வேலைபுரிந்த லோகேஷ் என்பவருக்கும், கௌதம் என்பவருக்கும், தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஓனர் ஹரி, லோகேஷ்க்கு சப்போர்ட் செய்யும் வகையில், மாட்டு லோன் வாங்க கொடுக்கப்பட்ட காசோலையை, லோகேஷிடம் கொடுத்துள்ளார். இதனால் லோகேஷ் தனக்கு 3 லட்ச ரூபாய் தர வேண்டும் எனக்கூறி, வக்கீல் நோட்டீஸ் கௌதமுக்கு அனுப்பி பிளாக்மெயில் செய்ததாக கூறப்படுகிறது. மாட்டு லோன் வாங்கி தருவதாகக் கூறி பெறப்பட்ட காசோலை யை தவறாக பயன்படுத்தி, பணம் பெற்றதாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறி, பாதிக்கப்பட்ட கூலித்தொழிலாளி கௌதம், கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார்.

உயர்திரு. வருவாய் கோட்டாட்சியர்
அலுவலம், விழுப்புரம்
5.5.214/876/2025
கனகசபை , த/பெ. இராமசாமி
பிள்ளையார் கோவில் தெரு
மழையம்பட்டு
திருவெண்ணெய்நல்லூர் வட்டம்
விழுப்புரம் மாவட்டம் -607203
...மனுதாரர்.
எதிர்
வருவாய் வட்டாச்சியர்
திருவெண்ணெய்நல்லூர்
...எதிர் மனுதாரர்

அறிவிப்பு

விழுப்புரம்மாவட்டம்திருவெண்ணெய்நல்லூர் வட்டம் பிள்ளையார் கோவில் தெரு மழையம்பட்டு கிராமத்தை சேர்ந்த கனகசபை த/பெ. இராமசாமி என்பவர் தனது தகப்பனார் திரு. இராமசாமி த/பெ.கிருபாபுரிஎன்பவர்மேற்படிகிராமத்தில் கடந்த 12.07.1992 அன்று இறந்ததை பதிவு செய்ய இறப்பு விபரத்தை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதாகவும் தற்பொழுது இறப்பு சான்றிதழ் உரிய காலத்தில் பதிவு செய்யாததை மன்னித்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தற்பொது இறப்பு சான்றிதழ் பதிவு செய்து கொள்ள உத்தரவு செய்ய வேண்டி மனு கொடுத்துள்ளார். இம்மனு பேரில்ஆட்சபேணை உள்ளவர்கள் மேற்கண்ட விளம்பர தேதியில் இருந்து 15நாட்களுக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சபேணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில்மனு ஒருதலைபட்சமாக உத்தரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் விலாசம்..
கனகசபை
த/பெ. இராமசாமி
பிள்ளையார் கோவில் தெரு
மழையம்பட்டு
திருவெண்ணெய்நல்லூர் வட்டம்
விழுப்புரம் மாவட்டம்- 607203

உயர்திரு. வருவாய் கோட்டாட்சியர்
அலுவலம், விழுப்புரம்
ந.க.அ4/877/2025
கனகசபை , த/பெ. இராமசாமி
பிள்ளையார் கோவில் தெரு
மழையம்பட்டு
திருவெண்ணெய்நல்லூர் வட்டம்
விழுப்புரம் மாவட்டம் -607203
...மனுதாரர்.
எதிர்
வருவாய் வட்டாச்சியர்
திருவெண்ணெய்நல்லூர்
...எதிர் மனுதாரர்

அறிவிப்பு

விழுப்புரம்மாவட்டம்திருவெண்ணெய்நல்லூர் வட்டம் பிள்ளையார் கோவில் தெரு மழையம்பட்டு கிராமத்தை சேர்ந்த கனகசபை த/பெ. இராமசாமி என்பவர் தனது தாயார் திருமதி. லட்சுமி க/பெ.இராமசாமி என்பவர் மேற்படி கிராமத்தில் கடந்த 21.08.2008 அன்று இறந்ததை பதிவு செய்ய இறப்பு விபரத்தை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதாகவும் தற்பொழுது இறப்பு சான்றிதழ் உரிய காலத்தில் பதிவு செய்யாததை மன்னித்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தற்பொது இறப்பு சான்றிதழ் பதிவு செய்து கொள்ள உத்தரவு செய்ய வேண்டி மனு கொடுத்துள்ளார். இம்மனு பேரில் ஆட்சபேணை உள்ளவர்கள் மேற்கண்ட விளம்பர தேதியில்இருந்து 15 நாட்களுக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சபேணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில் மனு ஒருதலைபட்சமாக உத்தரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் விலாசம்..
கனகசபை
த/பெ. இராமசாமி
பிள்ளையார் கோவில் தெரு
மழையம்பட்டு
திருவெண்ணெய்நல்லூர் வட்டம்
விழுப்புரம் மாவட்டம்- 607203



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அதிமுக தெற்கு ஒன்றிய செயலாளர் டி.ரவிச்சந்திரன் 61வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது இல்லத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும்கேக்வெட்டியும்கொண்டாடினர்இந்நிகழ்ச்சியில் தொழில் அதிபர் பழனி, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பண்ணந்தூர் பழனிசாமி, ஒன்றிய பொருளாளர் ராமு, முன்னாள் ஊராட்சி கழக செயலாளர் வேடியப்பன், கழக பிரமுகர்கள் துரைசங்கர், ராஜப்பன், செந்தில்குமார், அமுதன், சிராஜ், விரத்திக், ரோஷன், ஜெய்ஹிந்த், வீரப்பன், மாலிக், டேவிட் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்



# எஸ் ஐ ஆர் பணியில் அரசு அலுவலர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்ஸ கலெக்டரிடம் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மனு!!

விருதுநகர் நவ 12,

வாக்காளர்பட்டியல்சிறப்புதீவிரதிருத்தப்பணியில் எனும் வாக்காளர் கணக்கீட்டு பணி தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால பாக் முகவர்கள் வீடு வீடாக சென்று படிவங்கள் வழங்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பாக் முகவர்கள் மூலமாக அதிகபட்சம் 50படிவங்கள் பெற்று வழங்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பாக முகவர்கள் மூலமாக பெற்றால் முறைகேடுகள் நடைபெற வாய்ப்பு உள்ளதாகவும்,வாக்காளர்கள் விவரங்கள் குறித்தும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை, வீடு, வீடாக சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களே நேரடியாக பெற வேண்டும் என வலியுறுத்தியும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா ஆட்சியரிடம் அதிமுக கழக அமைப்பு செயலாளர், முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தலைமையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அப்போது போது

கழக சிறுபான்மை நல பிரிவு பொருளாளர் ஜான் மகேந்திரன், முன்னாள் வாரிய தலைவர் மான்ராஜ்,ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் சந்திரபிரபாமுத்தையா, கழக மகளிரணி துணைச்செயலாளர், முன்னாள் எம்எல்ஏ ஸ்ரீவிமற்றும் மற்றும் விருநகர் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக நிர்வாகிகள், பிற அணிகள் சார்ந்த நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்



# திருப்பத்தூர் அடுத்த நாட்றம்பள்ளி பயணிகளுக்காக பேருந்து நிழல் கூடம் திறந்து வைத்த ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்

நாட்றம்பள்ளி நவ.12

திருப்பத்தூர் மாவட்டம்.நாட்றம்பள்ளி பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பேருந்து நிழல் கூடம் ஜோலார்பேட்டை சட்டமன்ற நிதியிலிருந்து 25 லட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிழல் கூடம் திறந்து வைத்த ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ். மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்தரவல்லி

இதில் 25 லட்சம் மதிப்பீட்டில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பேருந்து நிலையம் திறந்து வைத்து தேவராஜ் பேசுகையில் பொதுமக்களுக்காக இவை பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது பொதுமக்கள் அனைவரும் கூடத்தில் இருந்து பேருந்து ஏறி செல்ல வேண்டும் எனவும் இங்கு பேருந்து நிழல் கூடத்தில் ஃபேன் போன்றவை அமைத்து பொதுமக்கள் அமர்ந்து செல்லவும் ஏதுவாக உள்ளது எனவே இதனை தமிழக முதல்வர் மற்றும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ் மற்றும் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் சிங்காரவேலன். நாட்றம்பள்ளி சேர்மன் வெண்மதி முனிசாமி. கட்சி நிர்வாகிகள் மற்றும் மகளிர் போன்றவை இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நிழல் கூடத்தை திறந்து வைத்தனர்

# குடும்ப அட்டைகளுக்கு அரசு பொங்கல் தொகுப்புகளுடன் மண்பானையுடன் அடுப்பினையும் சேர்த்து இலவசமாக வழங்க வழியுறுத்தி ஆர்ப்பாட்டம்!



கிருஷ்ணகிரி,நவ.12

தமிழ்நாடு மண் பாண்டத் தொழிலாளர் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் .தமிழக அரசு ஆண்டுத் தோறும் பொங்கல் பண்டிகையின் போது அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் இலவசமாக கரும்பு, சர்கரை, அரிசி, வெல்லம் ஆகியவற்றினை இலவசமாக வழங்கி வருகிறது.

அந்த வகையில் தமிழக அரசு தமிழக விவசாயிகளை ஊக்குவித்து வருவது போல மண்பாண்டத் தொழிலாளிகளின் வாழ்வாதரத்தினை ஊக்குவிக்குவிக்க வேண்டும் என வழியுறுத்தி மாவட்டத் தலைவர் தேவேந்திரன் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட மண்பாண்டத்தொழிலாளிகள் பேரணியாக வந்து மாவட்ட ஆட்சியரை சந்தித்து தமிழக அரசு ஆண்டுத்தோறும் குடும்ப அட்டைத்தாரர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் தொகுப்பு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. அது போல இந்த பொங்கல் பண்டிகைக்கு பொங்கல் தொகுப்புடன் மண்பானை மற்றும் மண் அடுப்புகள் வழங்கிட வழியுறுத்தி மண் பானை மற்றும் மண் அடுப்புகளுடன் வந்த மண் பாண்டத் தொழிலாளின் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரை சந்தித்து கோரிக்கை மனுவினைக் கொடுத்தனர்.

கடந்த பல தலைமுறைகளாக ஒரே இடத்தில் அமர்ந்து தொழில் செய்து வரும் இடத்திற்கு இலவச வீட்டுமனைபட்டா வழங்க வேண்டும்,

மத்திய, மாநில அரசுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது

ஜாதிவாரியாக கணக்கெடுக்கப்பட வேண்டும்,

ஏரி,குளங்களில் களிமண் எடுக்க மண் பண்ட தொழிளிகளுக்கு உரிய அனுமதி அளிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

அப்போது மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட பெருலாளர் வேடியப்பன், முன்னாள் மாவட்ட செயலாளர் கோவிந்தசாமி, மாவட்ட துணைத் தலைவர் சீனப்பா மற்றும் தமிழ்நாடு மண் பாண்டத் தொழிலாளர் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்கத்தினைச் சார்ந்த கிருஷ்ணன், தண்டபாணி, முனியப்பன், ஹரி, முகுந்தன், கனகராஜ், சக்திவேல், சிவகாமி, உமா, மலர்வழி, அமுதா, கந்தன், சீனிவாசன், சிவகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்